## தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் - 2017

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனச் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக் கூற்றுகளினால் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமையின் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களில் 03 மாதங்கள் முதல் 01 வருடம் வரை முதலீடு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 724,799,416 தொகை நியமத்தின் 76 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்படவேண்டியிருந்ததுடன் அதற்கு முரணாக நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக ஆக்கபூர்வமான வாழ்க்கை காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 30,903,039 தொகை கிரயத்தை உடைய 05 நிலையான சொத்து விடயங்கள் முற்றாக பெறுமானத் தேய்வு கழித்திருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்டுள்ள மதிப்பீட்டு வழு, இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்மாண வேலை ஒப்பந்த வேலை ஒன்றிற்காக மீளாய்வண்டின் போது தனியார் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்தப்பட்ட ரூபா 9,395,308 இற்கான முற்பணத்தொகை, முற்பணக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக பெறவேண்டிய கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 மற்றும் 2012 ஆண்டுகள் தொடர்பாக பஸ் கம்பனியில் இருந்து நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 742,312 தொகை ஒன்று கணக்காய்வுத் திகதியாகிய 2018 ஜுன் 01 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கைப் போக்குவரத்து சபையிலிருந்து நிறுவனத்திற்கு, மருத்துவ சேவைக் கட்டணமாக ரூபா 4,263,078 தொகையொன்று அறவிடப்பட்ட வேண்டியிருந்ததுடன், இலவச பிரயாண அனுமதிப்பத்திர கட்டணம் என இலங்கை போக்குவரத்து சபைக்கு நிறுவனத்தினால் ரூபா 10,253,596 தொகை செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு செலுத்த வேண்டியிருந்த தொகையில் 2012 ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 1,470,832 தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று இன்றி வாடகை அடிப்படையில் பெற்றிருந்த கட்டிடமொன்று மற்றும் பாதுகாப்பு சேவை வழங்குதல் தொடர்பாக கழுத்துறை பிரதேசத்தை சேர்ந்த சாரதிகள் பாடசாலை ஒன்றிலிருந்து 2011 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 7,758,267 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கை யின் பிரிவு 8.2.2 | நிறுவனத்திற்கு சொந்தமான பணம் முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் இணக்கம் மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரமும் பெறப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது நிறுவனத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 764,290,371 இற்கான தொகையொன்று நிலையான சொத்துக்கள், திறைசேரி முறி மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்திருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 715(2) | பண்டங்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்கள் ஆகிய கருமங்கள் சாட்டப்படும் உத்தியோகத்தரால் மாத்திரமே மேற்கொள்ளப் பட வேண்டுமெனினும் அவ்வாறு குறிப்பிடப்பட்ட நபர் ஒருவர் களஞ்சியக் காப்பாளராக குறிப்பிடப்பட்டிருக்காததுடன், இருப்பு விடங்கள் வெவ்வேறாக உத்தியோகத்தர் பலரின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்ததுடன், அவை உரிய முறையில் களஞ்சியப் படுத்தியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவிற்காக சமர்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சியுள்ள ரூபா 92,852 தொகை பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2000 ஜனவரி 10 திகதிய பீஎப்/பீஈ 5 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | (i) திறைசேரியின் அங்கீகாரமொன்று இன்றி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த சுற்றறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் 12 வைத்தியர்களுக்கு கடமை தடை போக்குவரத்து மற்றும் சமூகமளித்தல் படியாக ஒரு மாதத்திற்கு ரூபா 35,000 வீதம் ஆண்டின் போது ரூபா 5,047,040 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br>(ii) சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மருந்தாளர், கதிர்வீச்சாளர் மற்றும் மருந்து ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் ஆகியோருக்கு மாதாந்தம் ரூபா 3,500 வீதம் ஆண்டின் போது 26 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 861,400 இற்கான தொகை விஷேட கடமைப்படியாக செலுத்தப் பட்டிருந்தது.<br>(iii) சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி மருத்துவ அலுவலர்களுக்கு மேலதிக படி ஆக ஆண்டின் போது ரூபா 3,459,300 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்தப் படி கொடுப்பனவு தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் கணக்காய்விற்கு சமர்பித்திருக்க வில்லை. |
| (ஈ) | 2014 திசெம்பர் 29 ஆந் திகதிய 29/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் விஷேட முற்பணத் தொகை ரூபா 4,000 எனினும் அதற்கு முரணாக பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மீது அத்தொகையை மிகைத்து ரூபா 25,000 வரை அதிகரித்து ஆண்டின் போது உத்தியோகத்தர்களுக்கு விஷேட முற்பணமாக ரூபா 1,962,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2015 மார்ச் 26 திகதிய 07/2015 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | சுற்று நிருப ஏற்பாடுகளுக்கு முரணாக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் உத்தியோகத்தருக்கு 10 தவணைகளில் அறவீடு செய்யும் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 30,000 இற்கான விழா முற்பணம் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு ஆண்டின் போது ரூபா 6,624,000 தொகை விழா முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதிய முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 236,394,046 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 281,778,132 தொகை ஆக காணப்பட்டமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 45,384,086 இற்கான வீழ்ச்சியடைந்திருந்தது. நிருவாக செலவுகள் ரூபா 20,916,399 இனால் அதிகரித்திருத்தல் மற்றும் மருத்துவ சான்றிதழ் சேவை வருமானம் ரூபா 25,496,331 இனால் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக உள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 111,147,463 தொகையாக இருந்த மிகை 2017 ஆண்டளவில் ரூபா 236,394,046 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்தது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 262,063,043 தொகைக்கான பங்களிப்பு 2016 ஆண்டளவில் ரூபா 580,079,715 தொகை வரை கிரமமாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 553,088,712 தொகை வரை ரூபா 26,991,003 இனால் குறைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவர்த்து மருத்துவ நிறுவனச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தினால் ஏதேனும் வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனங்கள் தொடர்பான விபத்துக்களுடன் தொடர்புடைய சந்தர்ப்பங்களில் மருத்துவ சேவை மற்றும் உதவி வழங்குதல், செலுத்த வேண்டிய நட்டஈடு அல்லது நட்டத்தின் தொகை தொடர்பாக ஆலோசனைகள் மற்றும் விஷேட ஆசிரிய ஆலோசனை வழங்குதல், நிறுவனத்தின் செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் தகைமையுடைய மருத்துவ உத்தியோகத்தர் சபை ஒன்று நியமனம் செய்தல், பொறிமுறை சுகாதாரம் மற்றும் பொறிமுறை விபத்து தொடர்பாக மருத்துவ ஆலோசனை மற்றும் விதப்புரைகள் வழங்குதல் அனைத்து விபரங்களையும் சேர்ந்த மோட்டார் வாகனங்கள், உடல்சார் மற்றும் உளம்சார் பொருத்தமான மற்றும் தேர்ச்சியுள்ள நபர்களினால் மாத்திரம் ஓட்டப்படுவதாக அல்லது செலுத்தப்படுவதாக நிறுவனத்தினால் அல்லது வேறு முகவர் நிலையங்களை வினவி அல்லது பொறுப்பாக இருத்தல் மற்றும் குறிப்பிட்ட செயற்படுத்தும் அதிகாரிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய மற்றும் செயற்படுத்த வேண்டிய போக்குவரத்து மருத்துவ விடயங்களில் நியமங்களை தயாரித்தல் வரையரைகளை நிர்ணயித்தல் ஆகிய கருமங்கள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவச் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவன சட்டத்தின் 3(ஆ) மற்றும் (இ) பிரிவுகளின் பிரகாரம் கனரக வாகனங்கள் உட்பட அனைத்து வகையான மோட்டார் வாகனங்களின் சாரதிகள் மற்றும் ஓட்டுனர்கள் உடல்சார் மற்று உளம்சார் தகைமை தொடர்பாக சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் அவர்களை மருத்துவப் பரிசோதனைகளுக்கு ஆளாக்கி அவர்களின் தகுதிகள்

மற்றும் தகமைகள் தொடர்பாக விதப்புரைகள் வழங்குதல் நிறுவனத்தின் செய்பணிகளாக காட்டியிருந்த போதிலும் நிறுவனத்தின் மொத்த வருமானத்தின் 62 சதவீதத்தை உழைத்துக் கொடுக்கும் எடை குறைந்த வாகனங்களுக்கு மருந்துவ சான்றிதழ் வழங்கும் முழு அதிகாரமும் 1951 இன் 28 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் 124 மற்றும் 126 பிரிவுகளின் பிரகாரம் நிறுவனத்திற்கு வழங்கியிருக்காமையினால் அந்த சட்ட அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மருத்துவ நிறுவனத்தின் வாகனத் தரிப்பிடத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த காணியின் ஒரு பகுதி கேள்வி நடைமுறையினை கடைபிடிக்கப்படாமல் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மாதாந்தம் ரூபா 75,000 தொகைக்கு 2012 ஆண்டு முதல் வாடகை அடிப்படையில் வாகனம் நிறுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக எழுத்துமூல உடன்படிக்கை ஒன்றினை அணுகியிருக்கவில்லை.

(இ) மருத்துவ நிறுவனத்தினால் தேசிய போக்குவரத்து சபைக்கு கட்டிடமொன்று வாடகைக்கு வழங்கியது தொடர்பாக 2004 ஆண்டிற்கு முன்னர் இருந்து மாதாந்தம் ரூபா 5,000 இற்கான வாடகையொன்று அறவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக இரு சாராரினாலும் எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்காததுடன் வாடகை தொடர்பாக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்று அதன் பிரகாரம் செயற்படுதல் மூலம் மாதாந்த வாடகைத் தொகையை தற்போதைய சந்தை பெறுமதியின் படி திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு கிளை அலுவலகங்கள் நடாத்தப்படுகின்ற கட்டிடங்களின் வாடகை உடன்படிக்கை 2017 ஜூலை 31 மற்றும் 2017 அக்தோபர் 31 திகதி முடிவடைந்திருந்தது. யாழ்ப்பாண அலுவலத்தின் வாடகை உடன்படிக்கை ரூபா 35,000 மாதாந்த வாடகையின் கீழ் ஒரு வருட காலத்திற்காக நீடிக்கப்பட்டிருந்ததுடன் மட்டக்களப்பு கிளை அலுவலகத்தின் ரூபா 35,000 இற்கான வாடகைத் தொகை ரூபா 85,000 வரை அதிகரித்து 2020 அக்தோபர் 20 வரை பெறுகை நடைமுறையை கடைபிடிக்காமல் நீடிக்கப்பட்டிருந்தது.

(உ) நிறுவனத்தின் கம்பஹா கிளை அலுவலகம் நிர்மாணிப்பதற்காக 0.0083 ஹெக்டயர் காணி பகுதியொன்று 2017 ஜூலை 04 திகதி ரூபா 20,250,000 தொகை செலுத்தி கொள்வனவு செய்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2018 ஏப்ரல் 20 வரை கிளை அலுவலகம் நிர்மாணிப்பதற்காக தேவையான விடயங்களை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பதவியணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 215 தொகை மற்றும் உள்ளவாறான பதவியணி 481 தொகையாக காணப்பட்டமையால், 266 உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்பட்டது.

(ஆ) நிறுவனத்தின் பொது முகாமையாளர் மற்றும் பிரதான கணக்காளர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டமையால் நிருவாக மற்றும் நிதி அதிகாரக் கையளிப்பு தொடர்பாக சிக்கல் நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவி உயர்வு நடைமுறை என்பன அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து 123 நிரந்தர உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும், தேவைபீனம் காரணமாக முகாமைத்துவத் சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி ஒப்பந்த நாள் சம்பளம் மற்றும் பாதிக் காலத்திற்கு மணித்தியால அடிப்படையில் 143 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக நிறுவனத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ் வரக்கூடிய கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது அறிந்திருந்தது.

## 6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த வேலை செயற்பாடுகள்

#### 6.1.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.3 இன் பிரகாரம் பெறுகை நேர அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) 2017 ஆண்டிற்கான பெறுகை திட்டத்தின் பிரகாரம் மருத்துவ சான்றிதழ்கள் அச்சிடுவதற்காக ரூபா 12,000,000 தொகைக்கான மதிப்பீட்டு கிரயத்திற்கு தேசிய போட்டி அடிப்படையில் கூறுவிலை அழைப்பின் மூலம் பெறுகை அலுவல்கள் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 நவம்பர் 23 திகதி எடை குறைந்த வாகனங்களுக்காக 900,000 மருத்துவ சான்றிதழ்களும், கனரக வாகனங்களுக்காக 100,000 சான்றிதழ்களும், பாதை அனுமதிப்பத்திர கவர்கள் 6,000 உம் அச்சிடுவதற்காக 2016 திசெம்பர் 01 திகதி பெறுகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுகை கைநூலில் பிரிவு 5.3.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு தேசிய பெறுகை முகவராண்மையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்து விலைகோரல் பதிவேடுகள் பயன்படுத்த வேண்டுமெனினும், அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ii) பெறுகை வழிகாட்டல் கைநூலில் பிரிவு 5.3.11 இன் பிரகாரம் மதிப்பீட்டுத் தொகையில் 1 சதவீதம் முதல் 2 சதவீதத்திற்கு இடைப்பட்ட விலைகூறல் பாதுகாப்புப் பத்திரம் என ஒரே தடவையில் செலுத்தும் தொகையொன்று பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும், அதற்கு முரணாக மதிப்பீட்டுத் தொகையில் 0.2 சதவீதமாகிய ரூபா 25,000 திருப்பி செலுத்தும் பணவைப்பு ஒன்று பெற்றிருந்தது.

(iii) 04 நிறுவனங்களில் கூறுவிலைகளினால் சமர்பித்திருந்ததுடன், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் விதிப்புரையின் பிரகாரம் லேக்ஹவுஸ் நிறுவனத்திலிருந்து மருந்துவச் சான்றிதழ்கள் அச்சிடுவதற்கு 2016 திசெம்பர் 27 இல் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், விஷேட காரணங்கள் குறிப்பிடப்படாமல் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 8.1 இற்கு முரணாக பெறுகை குழுவினால் ரூபா 11,040,000 இற்கான தொகைக்கு அரச அச்சக திணைக்களத்தின் மூலம் சான்றிதழ்கள் அச்சிடுவதற்கு 2016 திசெம்பர் 29 திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், 350,000 எடை குறைந்த வாகனங்களுக்கான சான்றிதழ்களும் மற்றும் 60,000 கனரக

வாகன மருத்துவச் சான்றிதழ்கள் என்பன குறிப்பிட்ட நாளில் வழங்கியிருந்ததுடன் வழங்கியிருந்த சான்றிதழ்களில் 3,041 தொகை பயன்படுத்த முடியாத மட்டத்தில் காணப்பட்டது.

(iv) பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8(ஆ) பிரகாரம் செயலாற்றுகை பாதுகாப்பு முறி ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு முறி ஒன்றின் மூலம் சமர்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அது வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய நாளைக்கு பின்னர் 28 நாட்கள் வரையும் செல்லுபடியாக இருக்கவேண்டும். அதற்கு முரணாக 2018 ஜனவரி 05 திகதியில் முடிவடையும் உடன்படிக்கை காலமாகிய ஒரு வருட காலம் மாத்திரம் செல்லுபடியாகும் செயலாற்றுகை பாதுகாப்பு முறி கேட்டிருந்த காரணத்தினால் அரச அச்சு திணைக்களத்தினால் 2018 ஜனவரி 06 திகதி வரை மாத்திரம் செல்லுபடியாகும் செயலாற்றுகை பாதுகாப்பு முறி ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

(v) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.3.16 இன் பிரகாரம் மாறற்று விலைகூறல் சமர்பிப்பதற்கு அனுமதி வழங்கியிருக்காத போதிலும் ஒரு விலைகூறல்தாரரின் மாற்று விலைகூறல் ஒன்றினை பெற்று மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்காக ரூபா 675,000 தொகை செலவிடப்பட்டு டீசேட்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன்றன.

(i) நிறுவனத்தினால் மீளாய்வாண்டின் போது 417 ஊழியர்களுக்காக 900 டீசேட்கள் அச்சிட்டு ஊழியர்களுக்காக வழங்கும் போது அதற்காக செலவிடப்பட்ட முழுத்தொகையாகிய ரூபா 675,000 தொகையும் நிறுவனத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) டீசேட் அச்சிடுதல் பெறுகை செய்முறையின் போது அந்த டீ சேட்களில் காணப்பட வேண்டிய விவரக் குறிப்புக்களை தயாரித்தல் இலங்கை நெசவுத் தொழில் மற்றும் ஆடைகள் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கான ரூபா 21,114 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், விலைகூறல் மதிப்பாய்வு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு மற்றும் திணைக்கள பெறுகை குழுவினால் நியம விவரக் குறிப்பீட்டு பரிசோதனை மேற்கொள்ளாமல் விலைகூறல்தாரர்களின் கூறுவிலைகள் மற்றும் ஊழியர்களின் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(iii) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.4.10(இ) இன் பிரகாரம் பண்ட பெறுகைகளின் போது மதிப்பிட்ட ஒப்பந்தத் தொகையில் 10 சதவீதத்தை விட குறையாத பொருத்தமான தொகைக்கான பாதுகாப்பு முறி ஒன்றில் மூலம் பொறுப்பு தொடர்பாக நிறைவேற்று பொறுப்பு மேவகை செய்யப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக பெறுகைகள் குழுவினால் ஒப்பந்த வேலையில் மொத்தப் பெறுமதி ஆகிய ரூபா 675,000 தொகையில் 5 சதவீதமான ரூபா 33,750 தொகைக்கு செயலாற்றுகை பாதுகாப்பு முறி வைக்க வேண்டுமென தீர்மானித்திருந்ததுடன் வழங்குனரினால் அந்த பெறுமதிக்கு செயலாற்றுகை பாதுகாப்பு முறி சமர்பிக்கப்பட்டிருந்தது.

### 6.1.2 தாமதமாகிய செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அநுராதபுரம் மற்றும் கண்டி அலுவலகங்களுக்காக கட்டிடம் ஒன்று வீதம் நிர்மாணிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால், அந்த நிர்மாண வேலைகள் 2018

ஏப்ரல் 20 ஆகிய கணக்காய்வு திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது இந்த அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பெற்றிருந்த கட்டிடங்களில் நடத்தப்படுவதுடன், ஆண்டின் போது அதற்காக முறையே ரூபா 580,000 தொகை மற்றும் ரூபா 1,020,000 தொகைகள் வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிறுவனத்தின் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்த போது 14.8 சதவீதம் முதல் 229 சதவீதம் வரை வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுபாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 7 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | இருப்புக் கட்டுப்பாடு | அவசர கொள்வனவுகள் குறையும் விதத்தில் மருந்துகள் தொடர்பாக உச்ச இருப்பு மட்டமொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | வருமான நிருவாகம் | நிறுவனத்திற்குச் சொந்தமான ஆதன வாடகை மற்றும் குத்தகையடிப்படையில் வழங்கும் போது வெளிப்படையான தன்மையுடன் பெறுபவர்களை தெரிவு செய்யும் செய்முறை ஒன்றினை கடைபிடித்திருக்காமை, வருமானம் உரிய காலப்பகுதிகளில் சேகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | ஊழியர் கடன் கட்டுப்பாடு | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் ஊழியர்களுக்கான படிகள் செலுத்தப்படல். |
| (ஈ) | ஒப்பந்த நிருவாகம் | சேவை உடன்படிக்கை இன்றி சுத்தம் செய்தல் மற்றும் பாதுகாப்புச் சேவைகள் பெற்றுக்கொள்ளல். |
| (உ) | நிதியப் பயன்பாடு | நிறுவனத்தின் நிதியம் முறையான அங்கீகாரம் இன்றி வெளியில் முதலீடு செய்தல் மற்றும் நடைமுறை கணக்குகளில் காணப்படும் மிகைப்பணம் குறை பயன்பாட்டுடன் பேணப்படல். |
| (ஊ) | வாகனப் பாவணை | (i) குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்கள் மறறும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்படாமை.<br>(ii) சம்பவக் குறிப்பேடுகள் மற்றும் வாகனங்கள் தொடர்பான விபரங்கள் பேணப்படாமை. |
| (எ) | பெறுகை | பெறுகை வழிகாட்டல் கைநூலில் 5.3.10 பிரிவின் பிரகாரம் விலைகூறல் அழைக்கப்படும் பதிவேடுகளில் விலைகூறல் செல்லுபடியாகும் காலம் குறிப்பிடப்பட்டிருக்காமை. |